
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 10 அக்டோபர் - 2005







எட்டாவது வேதாகம கருத்தரங்கில்
பங்கு பெற்றோரில் ஒரு பகுதி

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. பரலோகம் இருப்பதாக நாம் ஏன் விசுவாசிக்கிறோம். 10
3. பெண்கள் பகுதி ........ 16
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25
7. எழுந்து கட்டுவோம் வாருங்கள் ........ 30

THIRUMARAI AASAAN
Published by Church of Christ
S. Rajanayagam Editor
J.C. Choate Honorary Editor
Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 18 October - 2005 Issue - 10

ஆசிரியர் உரை

# "உங்களுக்கும் வெகு வருத்தமா?"

உங்களுக்கும் வெகு வருத்தமா? என்று கேட்கும் போதே நம் எல்லோருக்கும் ஒரு காரியம் மிக நன்றாக விளங்கும். எதுவோ, யாருக்கோ, எங்கோ, எப்போதோ, மிக வருத்தமாக இருந்துள்ளது என்று. நான் சொல்லும் இந்த 'வருத்தம்'. பழைய ஏற்பாட்டில் உள்ள இராஜாக்களின் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. நம்முடைய தமிழ் வேதாகமத்தின் 'வருத்தம்'. என்ற வார்த்தைதான் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால், இதே வார்த்தைக்கு, ஆங்கில வேதாகமத்தின் வேறுபட்ட மொழியாக்கங்களில், "மிக அதிகம்", "வெகு வருத்தம்" "வெகு தூரம்" என்ற வித்தியாசமான வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சரி, இப்பொழுது தமிழ் வேதாகமத்தில், இவ்வார்த்தை இடம் பெற்றுள்ள வசனத்தை கவனியுங்கள். "ஆகையால், இராஜாவானவன் யோசனை பண்ணி, பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி ஜனங்களைப் பார்த்து நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம், இஸ்ரவேலரே, இதோ, இவைகள் உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின உங்கள் தேவர்கள் என்று சொல்லி, ஒன்றை பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான் இந்தக் காரியம் பாவமாயிற்று. " (1இராஜா 12:28-30).

இந்த வசனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள, இதன் பின்னணியைத் தெரிந்துகொள்வது மிக அவசியமானதால், அது குறித்து கொஞ்சம் உங்களுக்கு விளக்குகிறேன்.

தேவன் கொடுத்த அளவில்லாத ஞானத்தை, அந்த தேவனுக்குப் பிரியமாகப் பயன்படுத்தாமல் , மதிகெட்டு, மக்கு மனைவிகளின் மந்திரப் பேச்சில் மயங்கி, விக்கிரகங்களின் பின்னால், ஒரு வாய் இல்லாப் பூச்சியை போல, மௌனமாக பவனி வந்த (1ராஜா 11:5,10) இராஜாவாகிய சாலமோனின் நாட்களுக்குப் பிறகு தேவனால் பராமரிக்கப்பட்டு வந்த ஒன்றுபட்ட இஸ்ரவேல் இராஜ்யம் வடக்கு, தெற்கு என பிளவுபட்டுப் போயிற்று.

இப்பிளவுக்கு காரணம் ஞானத்தந்தையாகிய சாலமோனுக்குப் பிறந்த மூடமகன் ரெகொபெயாம் தான். சாலமோனின் மறைவிற்குப் பிறகு அவனுடைய மகன் ரெகாபெயாமை, ஒரே ஒரு நியாயமான நிபந்தனையின் அடிப்படையில் இராஜாவாக ஏற்றுக் கொள்ள ஜனங்கள் தயாராகவே இருந்தார்கள். (12:1,4) அந்த நிபந்தனை, எல்லாக் குடிமக்களும் ஒரு ராஜாவினிடத்தில் எதிர்பார்க்கின்ற ஒன்றுதான் "நீர் உம்முடைய தகப்பன் சுமத்தின கடினமான வேலையையும், அவர் எங்கள் மேல் வைத்த பாரமான நுகத்தையும் லகுவாக்கும்; அப்பொழுது உம்மைச் சேவிப்போம் என்றார்கள். (12:4)

ஆனால், இந்த ரெகொபெயாம் ஆலோசனை என்ற பெயரில் சில நாட்களை இழுத்தடித்து, இறுதியில் முதியோருடைய வார்த்தைக்கு முழுக்குப் போட்டு விட்டு, வாலிபருடைய ஆலோசனைக்கு அடிமைப்பட்டு, ஜனங்கள் ஆத்திரப்படும் கடின வார்த்தைகளைப் பேசினபடியால், பெரும்பாலான இஸ்ரவேலர் அவனிடமிருந்து பிரிந்து போனார்கள் (12:12-9) ஒருவேளை பிரிந்து போனது தேவச் சித்தமாக இருந்தாலும், இந்த ஞானியின் மகன் இதற்குக் காரணமாயிருக்கத் தேவையில்லை என்றே தோன்றுகிறது. ஒரு வேளை, இவன் புத்தியாய் நடந்திருந்தால், இதைத் தவிர்த்திருக்கலாமோ?.

இப்படி, இந்த ரெகொபெயாம் என்ற ஒரு தனிமனிதன் மீது ஏற்பட்ட கோபத்தினால், இஸ்ரவேலின் பத்துக் கோத்திரத்தார், ரெகொபெயாமின் தலைமையை ஏற்க மறுத்து, ஒரு காலக்கட்டத்தில், சாலமோன் ராஜாவினிடத்தில் கலகம் செய்து ஓடிப்போன (11:40) **ரெகொபெயாமை, தங்களுக்கு இராஜாவாக ஏற்படுத்திக் கொண்டு தனியாகப் பிரிந்து போனார்கள். தனிப்பட்ட மனிதன் மீது ஏற்பட்ட பெருங்கோபம் அவர்கள் கண்களை முற்றிலுமாக மறைத்தபடியால், தங்கள் ராஜாவை மாத்திரமல்ல, தேவனால், கொடுக்கப்பட்ட பட்டணமாகிய எருசலேமை, தங்கள் ஆன்மீக வாழ்வுக்கு அடித்தளமாக இருக்கும் எருசலேமை விட்டுப் போகிறோம்**

என்பது அவர்களுக்குக் கொஞ்சமும் தெரியாமல் போய்விட்டது. தாங்கள் செய்யும் **மிகப் பெரிய தவறையும்,** அதனால் ஏற்படும் **கடும் விளைவுகளையும்,** அப்பொழுது அவர்கள் அறியாமலிருந்தார்கள்.

இஸ்ரவேலருடைய வாழ்க்கையில் எருசலேம் என்பது முக்கியமானது மட்டுமல்ல, அது அவர்களுடைய வாழ்க்கையில் இரண்டறக் கலந்த ஒன்று. எருசலேம் இஸ்ரவேலருக்குத் தலைநகரமாகவும், ஆட்சிக் கட்டிலின் பீடமாகவும், ஆன்மீக வாழ்க்கையின் மையமாகவும், வழிபாட்டுத் தலமாகவும் இருந்தது. எருசலேம் மகாராஜாவின் நகரமென்றும் அழைக்கப்பட்டுள்ளது. (மத். 5:35) இந்த எருசலேமை நோக்கித் தான் தானியேல் தினமும் மூன்று வேளை ஜெபித்தான். (தானி. 6:10) இந்த எருசலேமின் பாழ்பட்ட நிலையைக் கேள்விப்பட்டுத்தான் சூசான் அரண்மனையில் ஊழியம் செய்த நெகேமியா துக்கம் தாளாமல் உபவாசித்து அழுதான் (நெகே. 1:4) ஒட்டுமொத்த இஸ்ரவேலருக்கும் எருசலேமின் மீது இருந்த பற்றை சங்கீதத்தில் நாம் காணமுடியும் ''எருசலேமே, நான் உன்னை மறந்தால் என் வலது கை தன் தொழிலை மறப்பதாக, நான் உன்னை நினையாமலும் எருசலேமை என் முக்கியமான மகிழ்ச்சியில், எண்ணாமலும் போனால், என் நாவு என் மேல் வாயோடே ஒட்டிக் கொள்வதாக'' (சங். 137:5,6).

இவ்வளவு மகத்துவமான எருசலேமை விட்டுத் தாங்கள் போகிறோம் என்பது கூடத் தெரியாமல், அந்த இமாலயத் தவறு கோபத்தினாலும் ஒரு வேகத்தினாலும் நடந்து விட்டது. கோபமும், விவேகமற்ற வேகமும் இவர்களை எந்த அளவுக்கு மோசம் போக்கினது தெரியுமா? தொடர்ந்து படியுங்கள்.

இங்கே, ஜனங்கள் தன்னைத் தகுதியினடிப்படையில் இராஜாவாகத் தெரிந்து எடுக்கவில்லை என்பதை கனகச்சிதமாகப் புரிந்து கொண்ட அதிர்ஷ்ட ராஜாவாகிய ரெகொபெயாம், ஜனங்களைத் தொடர்ந்து தன் வசமே வைத்திருக்கத் தேவையான திட சிந்தனையிலும், அதிரடித் திட்டத்திலும் இறங்கினான். எருசலேமை ஜனங்கள் மனப்பூர்வமாக விட்டு வரவில்லையென்பதையும் அவன் மிக நன்றாக அறிந்திருந்தான். ஜனங்கள் தங்களுடைய மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற எருசலேமுக்குப் போக்கும் வரத்துமாக இருப்பது. தனது பதவி சுகத்திற்கு ஆபத்தாகிவிடும் என்று எண்ணி, தன்னுடைய எல்லைக்குள்ளே, எருசலேமின் மாதிரியின்படியே ஒரு பொய் மார்க்கத்துக்கு ஏற்பாடு செய்தான் (12:28).

தனது சொந்த லாபத்திற்காகவே முற்றிலும் பொய் மார்க்கத்தை உண்டு பண்ணின ரெகொபெயாம் அதன் முழு உண்மையையும் மறைத்து '' **நீங்கள் எருசலேமுக்கு போவது உங்களுக்கு வருத்தம்**'' என்று கூறி பழைய ஏற்பாட்டின் மிகப்பெரிய பொய்களில் ஒன்றை கூசாமல் கூறினான். '' எருசலேமுக்குப் போவது ஜனங்களுக்கு வருத்தமாம்'' எப்படியென்று பார்த்தீர்களா?.

உண்மையில், அது ரெகொம்பெயாமுக்குத் தான் வருத்தம். அவனது பதவிக்கு, புகழுக்கு, சொகுசு வாழ்க்கைக்கு, வருமானத்துக்கு, அந்தஸ்த்துக்கு என்று அவனுக்குத்தான் நஷ்டம். ஆனால், தன்னலத்திற்காக, ஒரு தேசத்து ஜனங்களை தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களை, தேவனை அறிந்த ஜனங்களை, தேவனுக்கு ஓரளவாவது பயப்படுகிற ஜனங்களை வெகுவாக மோசம் போக்கினான். எருசலேமுக்குப் போகவிடாமல், சதி செய்து தடை ஏற்படுத்தினதுமல்லாமல், என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று சொன்ன தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக விக்கிரகங்களை உண்டு பண்ணி (12:28) ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான் (2:29) தாணும், பெத்தேலும் வடக்கிலும், தெற்கிலுமுள்ள பட்டணங்கள். அதாவது, யூதாவிலுள்ள ஒரு எருசலேமுக்குப் பதிலாக, இஸ்ரவேலில் இரண்டு எருசலேம்களை உண்டாக்கினான். ஜனங்கள் மீது எவ்வளவு அக்கறை பார்த்தீர்களா?

இன்னும் தேவனால் தன்னுடைய ஊழியத்திற்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட லேவி கோத்திரத்தாரை ஆசாரியர்களாக இருக்க தொடர்ந்து அனுமதித்தால், ஒருவேளை அவர்கள் காலப்போக்கில், யெகோவா வணக்கத்திற்கு வழி நடத்தி விடுவார்கள் என்று அஞ்சி, அவர்களைப் புறக்கணித்து, அவர்கள் ஊரை விட்டே ஓடிப்போகும்படி செய்து (II நாளா. 13:9) ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியர்களாக ஏற்படுத்தினான் (வ. 32) மேலும் எருசலேமில், தேவனால் நியமித்து, கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கொப்பாக, பண்டிகை நாட்களை தன் மனதில் தானே நியமித்து ஏற்படுத்தினான் (வ.33).

தனக்காக மாத்திரம் இவையனைத்தையும் செய்து விட்டு, ஜனங்களுக்காகவே எல்லாவற்றையும் செய்ததைப் போல பாசாங்கு காட்டி, ''**நீங்கள் எருசலேமுக்குப் போவது உங்களுக்கு வருத்தம்**'' என்று பசப்பு வார்த்தைகளைக் கூறி, அதில் வெற்றியும் பெற்றுவிட்டான்.

இவன் செய்த காரியம் அனைத்தும் இவனுக்கு நன்றாகவே பட்டது. ஜனங்களுக்கும் பிரியமாயிருந்தது. ஆனால், ''**இந்தக் காரியம் பாவமாயிற்று**'' என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது (12:30) இப்படி பாவமான இந்தக் காரியத்தில் சிக்கிக் கொண்ட இஸ்ரவேலின் பின் சரித்திரம் உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக தேவனை விட்டு விலகி, முற்றிலும் விக்கிரக வணக்கத்தில் மூழ்கி, யெகோவாவுக்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமுமில்லையென்ற நிலைக்கு வந்து விட்டார்கள் அதன் விளைவு? ஆன்ம வாழ்விலே அழிந்து போனதோடல்லாமல், சரீர

வாழ்விலும் எதிரிகளுக்கு அடிமைப்பட்டு, கி.மு. 722 முதல் சரித்திரத்தின் பக்கங்களிலிருந்தே மாயமாக மறைந்து விட்டார்கள். பரலோகத்தின் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு நேர்ந்த கதியைக் கவனித்தீர்களா?.

சரி, நாம் பார்த்த இந்த சரித்திர நிகழ்வுகளை அப்படியே நெஞ்சில் நிறுத்தி, நம்முடைய நாட்களில் இருக்கும் கிறிஸ்தவ மார்க்கத்தை, அப்படியே உற்றுப் பார்த்தால், ஒருவேளை நாம் ரெகொபெயாமின் காலத்தில் தான் வாழ்கிறோமா என்ற சந்தேகம் வலுவாக ஏற்படுகிறது. கிட்டத்தட்ட அதையொத்த சம்பவங்கள் அப்படியே நிகழ்கிறது. இஸ்ரவேல் மக்கள் மெய் வணக்கத்திலிருந்து விலகி, ஒன்றுமில்லாமல் போனது போல், கிறிஸ்தவ சமுதாயம் மெய்ப் பக்தியில் இருந்து தடம் புரண்டு நித்தியத்தை இழந்து போகுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

ஆகவே, இதை வாசிக்கும் நாம் நம்முடைய ஆன்மீக வாழ்வில் ஒன்றுமில்லாமல் போய்விடாமலிருக்க இதிலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வது அவசியம்.

### *I. எருசலேமும், எருசலேம் சுவிசேஷமும்*

முதலாவது, எப்படி பழைய ஏற்பாட்டின் நாட்களில், இஸ்ரவேலருக்கு எருசலேம் ஒரு முக்கிய இடமாக இருந்ததோ, அதைப் போலவே, இன்றைக்கு கிறிஸ்தவர்களாக வாழ விரும்புபவர்களுக்கும் எருசலேம் ஒரு வகையில் முக்கியமானதாகவே உள்ளது. இங்கே, **எருசலேம் ஒரு புனித ஸ்தலம்** என்று நான் **நிச்சயமாக சொல்லவில்லை.** இருப்பினும், எருசலேமுக்கும் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி வாழ விரும்புபவர்களுக்கும் ஒரு உறவு இருக்கவே செய்கிறது. இவ்வுண்மையை யாரும் மறுக்க முடியாது.

புறஜாதியனாயிருந்த கொர்நெலியுவும், அவன் வீட்டாரும் இரட்சிக்கப்பட்ட சம்பவத்தை எருசலேமிலிருந்த யூதர்களுக்கு பேதுரு அப்போஸ்தலன் விவரித்துச் சொன்னபோது (அப். 11 அதி), "ஆதியிலே" என்ற வார்த்தையை பயன்படுத்தியுள்ளார் (வ.15) அதாவது, "எருசலேமில்" நடந்தது போலவே என்று குறிப்பிட்டுள்ளதை கிறிஸ்தவத்தோடும், கிறிஸ்தவர்களோடும் சம்பந்தப்பட்ட அநேக காரியங்கள் எருசலேமில் ஆரம்பமானவை தான்.

இயேசு கிறிஸ்து 12 சீஷர்களை எருசலேமில் காத்திருங்கள் என்று தான் கட்டளையிட்டார். **எருசலேமில்தான் முதல் சுவிசேஷப் பிரசங்கம்** பேதுருவால் செய்யப்பட்டது. **எருசலேமிலிருந்து தான் "இரட்சிப்பின்**

**திட்டம்''** வெளியானது. எருசலேமில் தான் முதன் முதலாக **''இயேசுவின் நாமத்தில்''** ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. **எருசலேமில் தான் ''சுவிசேஷத்திற்கு மக்கள் முதன் முதலாக கீழ்ப்படிந்தார்கள்''. எருசலேமில் தான், ''கிறிஸ்துவின் சபை''** ஆரம்பமாயிற்று. **''முதல் ஆராதனை'' எருசலேமில் தான்** நடைபெற்றது. வாரம் தோறும் கடைப்பிடிக்க வேண்டிய **''கர்த்தரின் பந்தி'' எருசலேமில் தான்** தொடங்கியது. மொத்தத்தில், புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கான தேவச் சித்தம் முழுமையாக எருசலேமில் தான் வெளிப்பட்டது.

அப்போஸ்தலர்-2-ன்படி இவ்வளவு காரியங்கள் எருசலேமில் நடந்துள்ளபடியால், சுவிசேஷத்தை நாம் ''எருசலேம் சுவிசேஷம்'' என்று சொன்னாலும் தவறு இல்லை என்றே எண்ணுகிறேன். எருசலேம் சுவிசேஷம் என்பது கண்டிப்பாக வேறொரு சுவிசேஷம் அல்ல. ஏதோ, இது புதிது என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும், பவுலும் பிரசங்கித்த அதே சுவிசேஷம் தான்.

ஆனால், அருமையானவர்களே, இன்றைக்கு இந்த சுவிசேஷம் ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்படுகிறதா? பேதுருவினால் பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கிக்கப்பட்ட **இரட்சிப்பின் மாதிரி** இன்று ஜனங்களுக்குக் கொடுக்கப்படுகிறதா? எருசலேம் சுவிசேஷத்தின்படியாக ஒருவன் சபைக்குள் வருகிறானா? அதே மாதிரியின்படியாக ஒருவன் இன்று தேவனை ஆராதிக்கிறானா? ஆராதனையின் ஒவ்வொரு பங்கும் எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியின்படி உள்ளதா? **எந்த மாதிரி** இன்றைய கிறிஸ்தவச் சமுதாயத்தால் பின்பற்றப்படுகிறது? வருந்தத்தக்க காரியமென்னவென்றால், மிகப்பெரும்பான்மையான கிறிஸ்தவ சமுதாயம், எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியைக் கடைப்பிடிப்பதுமில்லை. அதன்படி வாழ்வதும் இல்லை. நீங்கள் எருசலேம் சுவிசேஷத்தின் மாதிரியின்படியாக வாழாவிட்டால் அது அழிவுக்குத் தான் வழிவகுக்கும் என்பதை நீங்கள் மறந்துவிடவேண்டாம்.

## *II. ரெகொபெயாமும், கிறிஸ்தவ மதத்தலைவர்களும்*

இரண்டாவதாக, கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் அநேகர், ஏன் எருசலேம் சுவிசேஷத்தைப் பின்பற்றுவது இல்லை என்ற இந்த இரகசியம் உங்களுக்கு விளங்குகிறதா? விளங்காவிட்டால் கவனியுங்கள். அன்றைக்கு வடக்கு இராஜ்யமாகிய இஸ்ரவேல் ஜனங்கள் ஆவிக்குரிய ரீதியில் பாழ்பட்டுப் போக ஒரே ஒரு ரெகொபெயாம் தான் இருந்தான். ஆனால், இன்றோ கிறிஸ்தவை நேசிக்கும் மக்கள் தங்கள் ஆன்ம வாழ்வில் மரித்துப் போக நாடுகள் தோறும், பட்டணங்கள் தோறும் ஏராளமான கிறிஸ்தவ

மதத்தலைவர்கள் உள்ளனர். இவர்களின் அட்டகாசம் போததென்று, ஊர்தோறும், ஏன் வீதிகள் தோறும் பொய்ப் போதகர்களும் மலிந்து கிடக்கின்றனர். எப்படி, அந்த ராஜா தன்னுடைய சொந்த லாபத்திற்காக ஜனங்களை எருசலேம் போக விடாமல் தடுத்து, பொய் மார்க்கத்தை ஏற்படுத்தினானோ, அதைப் போலவே ஏராளமாய் இருக்கிற ரெகொபெயாம்கள் **எருசலேம் சபைக்குப்** பதிலாக **பொய்ச் சபைகளையும், பொய் உபதேசங்களையும்** ஏற்படுத்தி வைத்துள்ளனர். அழிந்து போன, அந்த ரெகொபெயாமாகிலும் ஒரு எருசலேமுக்குப் பதிலாக, இரண்டு எருசலேம்களைத்தான் உண்டு பண்ணினான். ஆனால், இந்த போலி கிறிஸ்தவ மதத்தலைவர்களும், கள்ளப்போதகர்களும், ஒரு எருசலேம் சபைக்குப் பதிலாக ஏராளமான பொய் சபைகளை உருவாக்கி வைத்துள்ளனர். கிட்டத்தட்ட 3000 பிரிவுச் சபைகள் இருப்பதாக புள்ளி விபரம் கூறுகிறது.

எப்படி அந்த இஸ்ரவேலர், தங்கள் இராஜாவுடைய வஞ்சக வார்த்தைகளை நம்பி, அவனுடைய கபட நாடகத்தை அறியாமல், அவனுடைய பொய் மார்க்கத்தின் உண்மை நோக்கத்தை புரிந்து கொள்ளாமல், அதிலே தங்களை ஈடுபடுத்தி, ஒரு பொய் பக்தியின் அடிப்படையில், பொய் சமாதானத்தைத் தேடிக் கொண்டார்களோ, அதைப் போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும், தங்கள் சொந்த லாபத்திற்கென்றே சகலவற்றையும் செய்யும் இந்த போலி மதத்தலைவர்கள் பின்னும், வரம் பெற்ற ஊழியர்களென்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளும் சில வேடதாரிகள் பின்னும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் வேறுபாடு தெரியாத அப்பாவி போதகர்கள் பின்னும் சென்று அவர்களின் விஷமத் தனமான உபதேசத்திற்கு தங்களை ஒப்புக்கொடுத்து பக்தி பரவசம் பூண்டு, இயேசு கிறிஸ்துவால் கடுமையாக சாடப்பட்ட பரிசேயர்களைப் போல், தங்களை ஒரு பெரிய பக்திமான்கள் என்று நினைத்து வாழ்ந்து கொண்டு உள்ளது.

எப்படி இஸ்ரவேல் ஜனங்கள், **எருசலேமுக்குப் போவது வருத்தம்** என்ற ராஜாவின் வார்த்தைகளை ஏற்றுக் கொண்டு, எருசலேமுக்குப் போவதை சுத்தமாகப் புறக்கணித்தார்களோ, அதைப் போலவே, இன்றைய கிறிஸ்தவ சமுதாயமும் தங்கள் மதத்தலைவர்களின் தந்திரப் பேச்சுக்கும் பொய் போதகர்களின் புளுகுக்கும், ஆவி என்ற பெயரில் முதலீடில்லா வியாபாரம் செய்யும் அற்புத வியாபாரிகளின் வசீகரப் பேச்சுக்கும் அடிமைப்பட்டு எருசலேம் சுவிசேஷமாகிய உண்மையைச் சுவிசேஷத்தை ஒதுக்கி ஓரம் கட்டிவிட்டனர். ஆகவே, அன்றைக்கு இஸ்ரவேலருக்கு எருசலேமுக்குப் போவது எப்படி வருத்தமான காரியமாக இருந்ததோ அதைப் போலவே இன்று, எருசலேம் சுவிசேஷத்தைப் பின்பற்றுவதும், வருத்தமான காரியமாகவே இவர்களுக்கு உள்ளது.

## III பொய் சபைகளும், தாணும்-பெத்தேலும்

இறுதியாக, தேவனால் கொடுக்கப்பட்ட, மாட்சிமை பொருந்திய எருசலேமுக்கு மாற்றாக எப்படி **தாணும், பெத்தேலும்** இருந்ததோ, அதைப் போலவே இயேசு கிறிஸ்துவால் இரத்தம் சிந்தி சம்பாதிக்கப்பட்ட அவருடைய மகிமை பொருந்திய சபைக்கு (எபே. 5:27) மாற்றாக, சபை என்ற பெயரால் ஏராளமான தாண்களும், பெத்தேல்களும் உள்ளன. அவைகளில், உலகெங்கும் வியாபித்திருக்கிற ஒரு அமைப்பு, சபை என்ற பெயரால் **அரசாட்சி** செய்து கொண்டுள்ளது. அதிலிருந்து பிரிந்தவை, அரசாட்சியோடு மருந்துக்கு கொஞ்சம் அருளாட்சியையும் சேர்த்து காரியமாற்றிக் கொண்டுள்ளது. அய்யோ! இவைகளின் ஆட்டம் பொறுக்க முடியவில்லையே, இதிலிருந்து விடுதலை கிடைக்காதா என்று கிறிஸ்தவம் ஏங்கி கிடந்த வேளையில், விநோத கூட்டம் ஒன்று புற்றீசல் போல் எழும்பி வந்து, வாயிலே நுழையாத ஏராளமான பெயர்களைத் தங்களுக்குத் தரித்துக் கொண்டு, ஆவி என்ற பெயரால் ஆட்டம் போட்டு, தேவனை உண்மையாய் நேசிக்கும் ஜனங்களை வெகுவாக மோசம் போக்கிக் கொண்டுள்ளது. நான் இப்படி கடுமையாக எழுதுவதற்கு, என்னை மன்னிக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

இதை வாசிக்கும் அருமை நண்பரே! கொஞ்சம் நாம் சிந்தித்துப் பார்ப்போம். அன்று, இஸ்ரவேலருக்கு எருசலேமைக் காட்டிலும் தாணும், பெத்தேலும் சமீபத்திலிருந்தது. எருசலேமுக்குப் போவதைக் காட்டிலும் தாணுக்கும், பெத்தேலுக்கும் போவது சுலபமாக இருந்தது. சந்தேகமில்லை. எருசலேமின் மாதிரியின் படியே பண்டிகைகள் உட்பட அனைத்தும் தாணிலும், பெத்தேலிலும் கிடைத்தது. அதிலும் சந்தேகமில்லை. எருசலேமுக்குப் போனால் கிடைக்கும் மன சமாதானமும் தாணிலும், பெத்தேலிலும் **கிடைக்கிற மாதிரி** இருந்தது. இதிலும் சந்தேகமில்லை. ஆனால், முடிவு?

அன்பான தேவப் பிள்ளையே! தயவு செய்து கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் நிலையை சீர்தூக்கிப் பாருங்கள். உங்களை நீங்கள் தற்பரிசோதனை செய்து பாருங்கள். **எனக்கும் எருசலேம் சுவிசேஷத்திற்குமுள்ள இடைவெளி எவ்வளவு என்று பாருங்கள்.** நீங்கள் எருசலேமுக்குப் போக விரும்பும்போது நீங்கள் அங்கே போக முடியாதபடி தடைகள் வரும். எப்படி இஸ்ரவேலில், தேவனுடைய பிரமாணங்களை அறிந்த ஆசாரியர்கள் துரத்தப்பட்டு, ஈனமானவர்கள் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டு ஜனங்களை பொய் மார்க்கத்தில் வழிநடத்தினார்களே அதைப்போல நீங்கள் இருக்கும் இடத்தில், புதிய ஏற்பாட்டு உபதேசத்தை முழுமையாக அறியாதவர்கள்

உங்களுக்கு ஊழியர்களாக இருந்து உங்களை வழிநடத்தக்கூடும் அவர்கள் ஒருபோதும் நீங்கள் எருசலேம் சுவிசேஷத்தைப் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள். எப்படி இஸ்ரவேலில் ஆசாரியர்கள், இஸ்ரவேலின் இராஜாவுடைய கட்டளையை ஏற்று, பொய் மார்க்கத்தில் ஜனங்களை வழிநடத்தினார்களோ, அதுபோலவே, இந்த ஊழியர்கள் தங்கள் மதத் தலைவர்களின் கட்டளைக்குப் பயந்து உங்களைப் பொய்ச் சுவிசேஷத்தில் வழிநடத்திக் கொண்டிருக்கக் கூடும்!.

ஆனால், அடுத்தவர்கள் மீது பழியை போட்டு, நாம் நியாயத்தீர்ப்பில் தப்பித்துக் கொள்ளமுடியாது என்பது உங்களுக்கு நினைவில் இருக்கட்டும். ஆம்! வழிநடத்தினவர்கள் மீதோ!, மதத்தலைவர்கள் மீதோ பழி சுமத்தி நாம் தண்டனையிலிருந்து விலகிக் கொள்ள முடியாது. ''தேவன் அவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்'' என்று வசனம் கூறுகிறது. (ரோமர். 2:6).

ஆகவே, அன்பானவர்களே, நீங்கள் ஒவ்வொருவரும் எருசலேம் சுவிசேஷத்தை அறியும் வாய்ப்பையும் அதன் மூலம் இயேசு கிறிஸ்து கட்டின ஒரே சபையாகிய **கிறிஸ்துவின் சபையைத்** (மத். 16:18) தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தையும் அந்த ஒரு சபைக்கு (எபே. 4:4) உங்களைக் கீழ்ப்படுத்தும் பாக்கியத்தையும் இந்தப் பூமியின் வாழ்க்கையில் பெற்றுக்கொள்வீர்களாக! ஒருவேளை, எருசலேம் சுவிசேஷத்தைக் கண்டுபிடித்து, அதற்குக் கீழ்ப்படிவது உங்களுக்கு **வெகு வருத்தமாக** இருந்தால், இஸ்ரவேலருக்கு கி.மு. 722 உடன் யெகோவாவோடு இருந்த உறவு அறவே அற்றுப் போனது போல, உங்களுக்கும் நியாயத்தீர்ப்புடன் பரலோகத்தின் தேவனோடு உள்ள உறவும் முற்றிலும் மறைந்து போகும், ஆம், மறைந்தே போகும்.

ஆகவே, விரைந்து செயல்பட்டு நித்திய வாழ்வுக்குப் பங்காளிகளாக மாறுவோமாக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

## நன்றி! நன்றி!!

**கா**ங்கயத்தில் நடந்த எட்டாவது வேதாகம கருத்தரங்கில் பெருந்திரளாகக் கலந்து சிறப்பித்த தேவதாசர்களுக்கும், விசுவாசக் கூட்டத்தார்களுக்கும், ஏனையோருக்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

குறிப்பாக, இக்கூட்டத்திற்காக ஊக்கமாக ஜெபித்த உள்ளங்களுக்கு மிகுந்த நன்றி கூறுகிறோம்.

இக்கருத்தரங்கின் மூலம் 22 ஆத்துமாக்கள் சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்பதையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

- ஆசிரியர்.

# பரலோகம் இருப்பதாக நாம் ஏன் விசுவாசிக்கிறோம்

பரலோகம் என்று சொல்லும்போது, ஏதோ வான மண்டலங்களை குறித்து நான் பேசாமல், தேவன் வாசம் செய்யும் உன்னதமான ஓர் இடத்தைக் குறித்துப் பேசுகிறேன். அது ஓர் அழகிய இடம், நீதிமான்கள் வசிக்குமிடம், தேவ பக்தியுள்ளோர், தங்கள் நித்திய காலமெல்லாம் வசிக்கப்போகுமிடம். பரலோகம் தேவனுடைய வார்த்தையில், புதிய எருசலேம் என்று அழைக்கப்படுகிறது.

நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்களை குறித்து இயேசு கிறிஸ்து சொல்லும்போது, சந்தோஷப்பட்டு, களிகூறுங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; "உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" என்றார் (மத்தேயு 5:12) இயேசு கிறிஸ்து தன் சீஷருக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுக்கும் போது, "..... பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக...." என்று போதித்தார் (லூக்கா 11:2) மேலும் அவர், "பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கள்ளமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே, உங்கள் இருதயமும் இருக்கும்" என்றார். (மத்தேயு. 6:20,21) இயேசுவை தேவனுடைய குமாரனென்று கிறிஸ்துவின் அப்போஸ்தலன் அறிக்கையிட்ட பின், இயேசு அவனை நோக்கி, "பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்கு தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்ட விழ்க்கப்பட்டிருக்கும் என்றார்" (மத்தேயு. 16:19). எழுபது பேரை ஊழியத்திற்கு அனுப்பிய போது, இயேசு கிறிஸ்து அவர்களிடம், "இதோ, சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிற தற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக்கா. 10:19,20)

தொடர்ந்து நாம் பார்க்கையில், பூலோகத்திலே மனந்திரும்பும் ஒரு பாவியின் நிமித்தம் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாயிருக்கும் எனக் காண்கிறோம். (லூக்கா 15:7). கிறிஸ்து பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார்

என காண்கிறோம். (யோவான் 3:13). பிதாவானவர் இயேசுவின் சீஷருக்கு பரலோகத்திலிருந்து அப்பத்தை கொடுக்கிறார் என்று சொல்லுகிறார் (6:32) கொரிந்து பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகையில், “பூமிக்குரிய கூடாராமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்” (கொரி. 5:1) என்றார். கலாத்திய நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு, பவுல், “நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாய் இருக்கப்பட்டவன்” என்றார். (கலா. 1:18) தேவனை அறியாதவர்களுக்கும், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் ஆக்கினையை செலுத்தும்படியாக கர்த்தர் பரலோகத்தில், அல்லது வானத்திலிருந்து வெளிப்படுவார் என்று தெசலோனிக்கே பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உறுதியளித்தார். (2 தெச. 1:7,9) பேதுரு சொல்லுகையில், அவர், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்திரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெபித்தார். கடைசி காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்க்ப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்த சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. (1பேதுரு 1:4,5) என்கிறார். யோவான் சொல்லுகையில் பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற்போயிற்று, யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வர கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியை போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது என்கிறார். (வெளி. 21:1,2) பரலோகத்தையும், ஆத்துமா வாசமாயிருக்கப்போகிற இடத்தையும் பற்றி நாம் இன்னும் பல வசனங்களை சொல்லிக்கொண்டே போகலாம்.

பரலோகத்திற்கு யார் போவார்கள்? இயேசு தன் நாளில் வாழ்ந்தவர்களைப் பார்த்து, நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 18:3) இவ்வசனத்திற்கு பொருள் யாதெனில், சிறு குழந்தைகளும், சிறுபிள்ளைகளும், நன்மை, தீமை அறியாத வயதிலுள்ளவர்கள் அப்படி

அவர்கள் இருக்கிறதால், தங்கள் கிரியைகளுக்கு கணக்கொப்புவிக்க அவசியமில்லையாதலால், இவர்கள் மரித்தால் பரலோகம் செல்லுவார்கள் என்பதே. கர்த்தருடைய ராஜ்யமாகிய சபை பரலோகத்திற்க்கு கொண்டு செல்லப்படும். பவுல் சொல்லுகையில், அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது, அவர் சகல துரைத்தனத்தையும், சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும், பிதாவுமாய் இருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். (1கொரி. 15:24) எபேசியர் 5:23ல் கிறிஸ்து சரீரமாகிய சபைக்கு இரட்சகராக இருக்கிறார் என்று நாம் வாசிக்கிறோம். (கொலோ. 1:18; அப். 20:28) அந்த சபையை கிறிஸ்து, "கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதை தமக்கு முன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" என்று காண்கிறோம். (எபே. 5:27). மத்தேயு 13:41ன்படி கர்த்தர் தமது தூதர்களை அனுப்பி, ராஜ்ஜியத்திலும், சபையிலிருந்தும் குற்றம் செய்தவர்களை அகற்றி அவர்களை அக்கினியிலே போடுவார்கள். சபையானது, பரிசுத்தமானதாய் பரலோகத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் என்பதால், நாம் பரலோகம் செல்ல அந்த சபையில் இருப்பது அவசியம். உண்மையுள்ளவர்கள், தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்தவர்கள் பரலோகம் செல்லுவார்கள் என்றும் சொல்லுகிறது. கிறிஸ்து, ".... நீ மரண பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகீரிடத்தை உனக்குத் தருவேன்" (வெளி. 2:10) என்று சொன்னார். யாக்கோபு, "சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான்" எனக் கூறுகிறார் (யாக். 1:12) யோவான், "ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" (வெளி. 22:14) என்று எழுதுகிறார்.

அதே சமயத்தில், யாரெல்லாம் பரலோகத்திலிருக்கமாட்டார்கள் என்பதையும் கூறிவிடவேண்டும். சாத்தானும், அவனுடைய தூதர்களும் இருக்கமாட்டார்கள். (மத்தேயு. 25:41) உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் (மத்தேயு. 13:41) துன்மார்கர் (1கொரி. 6:9,10; கலா. 5:19,21) வெளி. 21:8ல், "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பான வர்களும், கொலைபாதகர்களும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விரக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும், இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்." வாசிக்கிறோம். மாய்மாலம் பண்ணுகிறவர்களும் பரலோகம்

செல்லமாட்டார்கள் என்பதையும் நம் நினைவில் கொள்ளவேண்டும். (மத். 25:51) இறுதியாக, வஞ்சிக்கப்பட்டவர்களும், மார்க்கப் பிரிவினையில் இருப்போரும் இழந்து போவார்கள் (2 தீமோத். 3:13; ரோ. 16:17,18) பரலோகத்தில் இருப்பது யார்? தேவன் இருக்கிறார். பரலோகம் ஜீவனுள்ள தேவனுடைய நகரமென்று வேதாகமம் அழைக்கிறது. (எபி.12:22) இயேசு கிறிஸ்து அங்கிருக்கிறார் (அப். 2:32,33) தேவதூதர்கள் அங்கிருக்கிறார்கள் (2தெச. 1:7-9)

பரலோகம் எப்படி இருக்கும்? பரலோகம் எப்படியிருக்குமென்று யோவான் எழுதியிருக்கிறார், பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின சமுத்திரம் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன். அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியை போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தை கேட்டேன். அது; இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார், அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூடயிருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமில்லை, அலறுதலும், வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தவர்; இதோ நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும் அவர் இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி; ஆயிற்று, நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் தண்ணீருற்றில் இலவசமாய் கொடுப்பேன் ஜெயங்கொள்கிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான். நான் அவன் தேவனாய் இருப்பேன், அவன் என் குமாரனாய் இருப்பான் (வெளி. 21:1-7) மேலும் யோவான் கூறுகையில், பின்பு, பளிங்கைப் போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும், ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்கு காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும் நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளை தரும் ஜீவ விருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியை கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் இனி ஒருசாபமுமிராது,

தேவனும், ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரை சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவருடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே, இராக்காலமிராது, விளக்கும், சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி, இந்த வசனங்கள் உண்மையும், சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக் காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு பரிசுத்த தீர்க்கத்தரிசிகளின் கர்த்தராகிய தேவனானவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன். இந்த புஸ்தகத்தில் உள்ள தீர்க்கத்தரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்." (வெளி. 22:1-7).

வெளிப்படுத்தின நூலை முழுவதும் நாம் வாசிக்கையில், ஆவியால் ஏவப்பட்ட யோவான் சொல்லும்போது, பரலோகத்தின் வீதிகள் பசும்பொன்னால் உண்டானது என்றும், அதன் மதில்கள் விலையேறின கற்களால் ஆனது எனவும் கூறுகிறார். யோவான் இந்நூலை துவங்குகையில், சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியை குறித்தும், தான் கண்ட யாவற்றையும், சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்கத்தரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளை கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். காலம் சமீபமாயிருக்கிறது. (வெளி. 1:1-3) என்று எழுதுகிறார். யோவான் ஒரு மனிதனாயிருந்து இது வரை யாரும் கண்டிராத காரியங்களை கண்டான். பரலோகம் பற்றியும், அதன் மகிமை பற்றியும் மனிதன் புரிந்து கொள்ளும் விதத்தில் அவர் எழுதியிருக்கிறார். அவர் பார்த்ததை பூமியில் இருக்கும் சில பொருளாகிய பொன், விலையேறிய கற்கள் போன்றவைகளோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார். விவரிப்பிற்கு அப்பால் அவர் எழுதியிருப்பது மிக அழகாக இருக்கிறதை நாம் காணலாம். வெளிப்படுதல் நூலில் எழுதியிருப்பதை படித்து விட்டு பரலோகம் சொல்ல வேண்டுமென ஒருவன் ஆசைப்பட்டால் பாதி இன்னும் சொல்லப்படவில்லை என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

யாரோ ஒருவர், பரலோகம் என்பது ஆயத்தமாயிருக்கும் ஜானங்களுக்காக ஆயத்தம் செய்யப்படும் இடமென்று கூறியிருக்கிறார். தேவன், அவருடைய ஜனங்களும் அவ்விடத்தில் வசிக்கிப்போகிறார்கள். ஆக, மனிதன் இவ்வுலகில் மரணத்தோடு முடியப்போகிறதில்லை. சரீரப்பிரகாரமாக அவன் மரித்தாலும், அவன் ஆத்துமா நித்தியத்திற்கும் வாழும். தேவனுக்கு, உண்மையுள்ளவர்களாகயிருந்து அவருக்கு கீழ்ப்படிந்தவர்கள் எல்லாம் ஒரு நாள் பரலோகம் கொண்டு செல்லப்படுவார்கள். அவர்கள் மரணத்தைக் காண்பதில்லை இவைகளை நாம் புரிந்து கொள்ள முயற்சிக்கும் போது, அவைகளை முழுமையாக அறிவது நமது அறிவிற்கு அப்பாற்பட்டது விசுவாசத்தோடு, அதை ஏற்றுக் கொண்டு அதை உண்மையாக பெற்றுக் கொள்ளும் நாள் நோக்கி முன்னேற வேண்டும். தேவன் நம்மை ஏமாற்றமாட்டார், நாம் நினைப்பதற்கு மேலாக தேவன் நமக்கு அருளிச் செய்வார்.

நீங்கள் பரலோகம் போக ஆசைப்படுகிறீர்களா? நீங்கள் ஒரு நாள் தேவனோடு வாழ ஆசைப்படுகிறீர்களா? நமக்கு இருப்பது இந்த ஒரு வாழ்க்கை மட்டுமே என்றால் அது எவ்வளவு பயங்கரமாக இருக்கும். இங்கு எத்தனை துன்பம், துயரம், வேதனை இருக்கிறதென்பதை நாம் உணர்கிறோம். ஆனால், இவ்வாழ்க்கையை விட மேலான ஒரு வாழ்வு உண்டு என்பதை நாம் அறிந்து உணரும் போது, இவ்வாழ்க்கையின் துன்பத்தை நம் எளிதாக கடக்கலாம்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லை என்றால், கல்லறைக்குப் பின் உங்களுக்கு நம்பிக்கை இல்லை. இதை நீங்கள் புரிந்து கொண்டு அதை சரி செய்வீர்கள் என நம்புகிறோம், அதற்காக ஜெபிக்கிறோம். நீங்கள் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்லும் நம்பிக்கையைப் பெறலாம். நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் (மாற்கு. 16:16) இதை நீங்கள் செய்தால், கர்த்தர் உங்களை இரட்சிப்பதோடு மட்டுமல்ல, அவர் தமது சபையில் உங்களை சேர்ப்பார். நீங்கள் இப்படி செய்ய சமயமும், காலமும் வாய்க்குமென நம்புகிறோம்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# அக்சாள்

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர யாத்திரையை முடித்து கானான் தேசத்தை, சுதந்தரித்துக் கொள்வதற்கு முன்பாக அத்தேசத்தை வேவு பார்த்து வந்து நல்ல பதிலை கூறியவர்கள் யோசுவாவும், காலேபும் தான். காலேப் மிகவும் மன உறுதியுள்ளவன். வேதாகமம் அவனைப் பற்றிக் கூறும் போது, **"என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும் உத்தமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய் வந்த தேசத்திலே அவனைச் சேர பண்ணுவேன். அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்".** (என். 14:24) என்கிறது. தேவனை உத்தமமாய் பின்பற்றின காலேபுக்கு அக்சாள் என்று ஒரு மகள் இருந்தாள். அவளை ஒத்னியேல் என்பவனுக்கு திருமணம் முடித்துக் கொடுத்திருந்தான் காலேப். இஸ்ரவேலில் நியாயாதிபதிகளின் பட்டியலில் ஒத்னியேல் முதல் நிற்கிறான்.

திருமணம் முடிந்து தன் கணவன் வீட்டிற்குப் போகும் முன் அக்சாளுக்கு வெகுமதியாக காலேப் நிலங்களை கொடுத்திருந்தான். அவள் புறப்படும் பொழுது தன் தகப்பனிடத்தில் மீண்டும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறாள். இச்சம்பவம் நியாயாதிபதிகளின் புத்தகம் முதலாம் அதிகாரம் 14,15 ஆகிய வசனப்பகுதிகளில் காணப்படுகிறது. "அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல் வெளியை கேட்க வேண்டுமென்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின் மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி; உனக்கு என்ன வேண்டும் என்றாள். அப்பொழுது அவள், எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும். வறட்சியான நிலத்தை எனக்கு தந்தீர். நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள். அப்பொழுது காலேப், மேற்புறத்திலும், கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான்."

மேற்க்கண்ட சம்பவத்திலிருந்து அக்சாள் மூலமாக நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

## அக்சாள் தன்னைத் தாழ்த்தினாள்

தன் தகப்பனிடம் ஆசீர்வாதத்தைப் பெற நினைத்தாள். ஆனால் கழுதையின் மேல் அமர்ந்தவாறே கேட்க விரும்பவில்லை. நான் விரும்பியதைப் பெற்றுக் கொள்ள முதலாவது, தன்னுடைய நிலையிருந்து இறங்கி, தன்னைத் தாழ்த்த வேண்டியிருந்தது.

கிறிஸ்துவுக்குள் அன்புச் சகோதரிகளே! இதைப் படிக்கும் நாமும் கூட நாம் இருக்கும் நிலையிலிருந்து இறங்க வேண்டும். இறங்க வேண்டுமென்பது நம்மை தாழ்த்த வேண்டும் என்பதைக் குறிக்கிறது. நாம் எல்லாம் காரியங்களுக்காகவும் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவண்டை போக வேண்டியுள்ளது. அவர் மூலமாய் நாம் பிதாவிடம் வேண்டிக் கொள்வதை நமக்குக் கொடுப்பார். இங்கு அக்சாள் கீழே இறங்கி தன்னைத் தாழ்த்துகிறாள். தேவனுடைய கண்களில் கிருபையும், தயவும், இரக்கமும் நன்மையும் கிடைக்கவேண்டுமானால் நாம் நம்மை தாழ்த்த வேண்டும். அநேக சமயங்களில் நாம் நம் மனதை மிகவும் கடினப்படுத்திக்கொள்கிறோம். தேவனுடைய வசனம் நம்மை எச்சரிக்கும் போது இப்படி நான் செய்ய வேண்டும் என்று கூறும்போது நம்முடைய உள்ளத்தை திறந்து அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். வசனத்திற்கு எதிர்த்து செயல்படுகிறோம். உலகம், ஆசை, பாரம்பரியம் போன்ற காரியங்கள் இன்று அநேகருடைய இருதயங்களில் குடிகொண்டிருக்கிறபடியால் தங்களை தாழ்மைப்படுத்தி மனங்களை ஏற்றுக்கொள்வதில்லை. இவைகளை விட்டு இறங்கி, வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ள நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை வசனத்தில் தேடிப்பார்க்க வேண்டும். வசனம் தான் நம்மை கடைசி நாளில் நியாயந்தீர்க்கப் போகிறது (யோ. 12:48) ஆகவே தேவனிடத்திலிருந்து இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் தாங்கள் இருக்கிற, தாங்கள் கடைப்பிடித்த மனிதக் கோட்பாடுகளிலிருந்து விலகி, தங்களைத் தாழ்த்தி வசனத்திற்கு செவிமடுக்க வேண்டும்.

## அக்சாள் விண்ணப்பம் செய்தாள்:

விண்ணப்பம் என்பது கெஞ்சிக் கேட்பது, தன் தகப்பனிடத்தில் **எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்** என்று சொல்லி கெஞ்சிக் கேட்கிறாள். வறட்சியான நிலத்தைத் தந்தீர். நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்.

இன்று அநேகருடைய வாழ்க்கையைப் பார்ப்போமானால் வறட்சியான நிலை காணப்படுகிறது. பிரயோஜனமற்ற வாழ்க்கை வாழந்து கொண்டுள்ளார்கள். தனக்கும், தன் குடும்பத்திற்கும் எந்த ஒரு நன்மையும்

ஈட்டாமல் வறண்டு போன ஜீவியத்தை மேற்கொண்டுள்ளனர். ஆவிக்குரிய வாழ்க்கையிலும், சரீர வாழ்க்கையிலும் வறட்சி. நீர்ப்பாய்ச்சலான நிலங்களைப் போன்று வளமையான வாழ்வு கிடைக்க வேண்டுமானால் தேவனிடம் போய்க் கெஞ்சி ஜெபிக்க வேண்டும். தாசனாகிய மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவனிடம் மன்றாடும் போது கெஞ்சிப் பிரார்த்தித்தான். இன்று அநேகர் விண்ணப்பம் செய்யாமலே தாங்கள் ஆசீர்வாதமாக வாழ வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இங்கு அக்சாள் விண்ணப்பம் செய்கிறாள். அதைப் போல் நாமும் தேவனிடம் எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும் என்று விண்ணப்பம் செய்வோம்.

## *அக்சாள் பெற்றுக்கொண்டாள்:*

தன் மகள் உரிமையோடு தன்னிடம் விண்ணப்பித்ததைக் கேட்ட தகப்பனாகிய காலேப் அவளுக்கு மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தார். கேட்டதை விட அதிகமாகப் பெற்றுக் கொண்டாள்.

இங்கு ஜெபத்தின் மூலமாக கிடைக்கும் நன்மைகளை கவனித்தோம். வேதாகமத்தில் நிறைய வாக்குத்தத்தங்கள் நிரம்பி இருக்கிறது. அவைகளைப் பற்றி ......மகா மேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தம் (1பேதுரு 1:4) என்று பார்க்கிறோம். இவ்வளவு சிறப்பான வாக்குத்தத்தங்கள் நம்முடைய வாழ்க்கையில் நாம் பெற்று அனுபவிக்க வேண்டுமென்றால் நாம் அவருடைய சொந்தப் பிள்ளைகளாய் மாற வேண்டும். அவருடைய பிள்ளைகளாய் மாறவேண்டுமென்றால் வேதாகமம் சொல்லுகிறபடி செய்யவேண்டும். வசனத்தை கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து பின்பு ஞானஸ்நானத்தின் மூலமாக அவருக்கு கீழ்ப்படிந்தால் தேவனுடைய பிள்ளைகளாய் மாறுவோம். அப்பொழுது பரலோக பாக்கியம் என்ற ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியும். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறதுபோல கர்த்தர் தமக்கு பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.

ஆகவே பிரியமானவர்களே, இந்த அக்சாள் நமக்கு மூன்று பாடங்களை கற்றுக் கொடுத்திருக்கிறாள். இவளைப் போல நம்மை தாழ்மைப்படுத்தி, விண்ணப்பித்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், சரீரப்பிரகாரம் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வோம்.

***- ரேச்சல் ராஜநாயகம்***

வாலிபர் பகுதி

# உங்களை எப்படி நினைக்கிறார்கள்?

**வை**யகத்தில் வசிக்கின்ற நாம் விரும்புகிறோமே இல்லையோ, நம் வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு நபரும் நம்மைப் பற்றி பலவிதமான எண்ணங்கள் கொள்ளுவதுண்டு. சிலர் நம்மை பார்த்த உடன் பிடித்திருக்கிறது என்று சொல்வதையும், சிலரோ நம்மை கண்டால் ஒதுங்கி போவதையும் இவ்வுலகில் நாம் பார்த்துக் கொண்டுதான் இருப்போம். நாம் ஒருவரை பற்றி நினைப்பதெல்லாம் சரியாக இருக்காது, சில விஷயங்கள் நாம் எண்ணியவாறு இருக்கும், ஆனால் சில வேளைகளில் நாம் நினைத்தற்கும், விஷயங்கள் நடப்பதற்கும் சம்பந்தமே இருக்காது, அல்லது நாம் நினைத்தற்கு மாறாக காரியங்கள் நடக்கும். அப்படி நடக்கையில் நாம் நம்முடைய எண்ணங்களை மாற்றி அமைக்க வேண்டியிருக்கும் என்பதை என்னோடு நீங்களும் ஒப்புக்கொள்வீர்களென நம்புகிறேன்.

பரலோகத்தின் தேவன், பரிசுத்த ஆவியானவர் மூலம் நமக்கு யாத்துக் கொடுத்த வேதமும், சில மனிதர்கள், மற்றொருவரை பற்றி என்ன எண்ணம் கொண்டார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. அதில் சில எண்ணங்கள் சரியானதாக இருந்தது, ஆனால், சில எண்ணங்களோ, தவறானதாக இருந்தது. இம்மாதம், வேதாகமத்தில் மிகச் சிறந்து விளங்குகிற சில நபர்களையும், அவர்களை பற்றி மற்றவர்கள் கொண்ட எண்ணங்களையும் நாம் கவனிப்போம், அப்படி கவனித்து நமது வாழ்க்கைக்குத் தேவையான சில பாடங்களை நாம் கற்றுக்கொள்ள முயற்சிப்போம். நம்முடைய இந்த மாத கட்டுரையை அலங்கரிக்க வருபவன் முற்பிதாவாகிய யாக்கோபின் மகன் யோசேப்பு. அவன் வாழ்க்கையில், அவனைப் பற்றி பலர் என்ன நினைத்தார்கள் என்பதைக் காண்போம் வாருங்கள்.

## *தன் தகப்பனுக்கு பிரியமானவன்*

யோசேப்பு, தன் தகப்பன் யாக்கோபு என்னும் முற்பிதாவுக்கு மிகவும் பிரியமான ராகேலுக்கு பிறந்த நேசமகன். இவனைப் பற்றிய செய்திகள். ஆதியாகமம் முப்பத்தி ஏழாம் அதிகாரம் முதல் ஐம்பதாம் அதிகாரம் முடிய இடம் பெற்றிருக்கிறது. சூரியன் தன் சூட்டை தணிக்க ஆழிக்குள் சென்றது இரவிலே சந்திரன் தோன்றினான், யோசேப்பு தன் கண்களை மூடி தூங்க சென்றான், தூங்கிக் கொண்டிருக்கையில், சொப்பனம் ஒன்று கண்டான், தன் அரிக்கட்டை, தன் சகோதரர்களின் அரிக்கட்டு வணங்கியதை அந்த

சொப்பனத்தில் கண்டான். கண்டவன் அதை தன் உடன்பிறப்புகளிடம் கூறினான். சகோதரர்களின் உதிரம் உஷ்ணமானது, குருதி கொதித்தது, இவனை எப்படியாவது அழிக்க வேண்டுமென சமயம் பார்த்து கொண்டிருந்தனர்.

ஒரு சமயம், அண்ணன்களெல்லாம் ஆடு மேய்க்க சென்றிருந்தார்கள், தகப்பன், தன் மகன் யோசேப்பை நோக்கி, நீ அண்ணன்மார்களிடம் சென்று அவர்கள் நலம் விசாரித்து வா! என்று அனுப்பினான். இவனும் தகப்பனிட்ட ஆணையை தலைமேல் கொண்டு நிறைவேற்றும்படி அவனிடமிருந்து விடைபெற்று, தன் சகோதரர்களிடம் சென்றான். அவன் தூரத்தில் தங்களுக்கு உணவு கொண்டு வருவதை கண்டு, என்ன உணர்வுகளை வெளிப் படுத்துகிறார்கள் எனப்பாருங்கள், "இதோ சொப்பனக்காரன் வருகிறான்" (ஆதி. 37:19) என்கிறார்கள். அதற்கு முன்னமே அவனின் மூக்கில் மூச்சுக் காத்திருக்கக்கூடாதென்று சதியோசனை செய்தார்கள். பார்த்தீர்களா! யோசேப்பைப் பற்றிய இவர்களின் நினைவுகளை உண்மையை சொன்னதால் உடன்பிறப்புகள் கூட பகைக்கிறார்கள். வாலிபர்களாகிய, நாம், நம் காதுக்கு வரும் செய்தி நமக்கு இனிமையாயிருக்கிறதா எனப் பாராமல், அது உண்மையா? எனக் கண்டறிவதில் அதிகம் நாட்டம் செலுத்த வேண்டும்.

யோசேப்பு, அடிமையாக இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்கப்படுகிறான். சாதம் கொண்டு வந்தவனை சதி செய்து, ஒழித்துவிட்டோம் என்ற நினைப்பில், இனி அவன் கண்ட சொப்பனம் எப்படி பலிக்கும் என்று தங்கள் உள்ளங்களில் நினைத்து கைகொட்டி சிரித்துக் கொண்டு, தங்கள் கையிலிருந்த அவனுடைய பலவர்ண அங்கியில் மிருக இரத்தத்தைத் தெளித்து, தங்கள் தகப்பனிடம் அதை கொண்டு சென்று காண்பித்து, யோசேப்பை துஷ்ட மிருகம் அடித்து விட்டது என கதை கட்டிவிட்டார்கள். கதையை உண்மை என நம்ப வேண்டிய சூழ்நிலை, ஆதாரம் இவர்கள் பக்கம் பேசுகிறது அல்லவா, எனவே யாக்கோபு தன் மகன் மரித்தான் என நம்புகிறான். வாலிபர்களே! யோசித்துப் பாருங்கள், தன் மகன் உயிரோடு இருப்பதறியாமல் இறந்துவிட்டான் என எண்ணுகிறான் யாக்கோபு. நம் வாழ்க்கையிலும் நாம் நினைப்பதற்கு நேர் எதிராக காரியங்கள் இருக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தானே இது காட்டுகிறது. ஒரு வேளை ஆதாரங்கள் கூட நாம் ஒன்றை நம்ப ஆதரவாயிருப்பதைப் போல தெரியலாம் ஆனால், அது கூட சிலவேளையில் தவறான ஒரு நம்பிக்கையாக இருக்குமென நாம் இதன் மூலமாகக் கற்றுக்கொள்ளலாம்.

யோசேப்பு எகிப்தில் போர்த்திபார் வீட்டில் அடிமையாக அல்லது வேலைக்காரனாக விற்கப்பட்டான். அவன் எஜமான் அவனை மிகவும் நம்பி, தன் வீட்டுப் பொறுப்பை இவனிடம் ஒப்படைத்தான். ஆனால் அவனின் மனைவியின் கபட நாடகத்தால், இவனை அந்த எஜமான், ஒரு ஒழுக்க கேடுள்ள மனுஷனாக நினைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்த சமயமும் யோசேப்பின் ஆடை அவனுக்கு எதிராக சாட்சியிட்டது. விளைவு சிறைவாசம், சிறையில், பானபாத்திரக்காரன், சுயம்பாகி ஆகியோரின் சொப்பனத்திற்கு விளக்கம் தந்தான். பானபாத்திரக்காரன் உயர்த்தப்படும் போது தன்னை நினைக்க வேண்டுமென்றான். அவனோ மறந்து போனான். ஆனால் தேசத்து ராஜா ஒரு சொப்பனம் கண்டு அதின் விளக்கம் கேட்டபோதுதான், பானபாத்திரக்காரன், யோசேப்பை நினைத்து அவனை ராஜாவிடம் அறிமுகம் செய்தான். பார்வோனின் சொப்பனத்திற்கு விளக்கம் அளித்த அவனைப் பற்றி பார்வோன் என்ன நினைக்கிறான் பாருங்கள், "அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப் போல வேறொருவன் உண்டோ என்றான்". எனக்கன்பானவர்களே! பார்த்தீர்களா! ஒரே யோசேப்பு, அவன் தெய்வ பயமுள்ளவன் தான். ஆனால், அவனைபற்றி ஒவ்வொருவரும் எப்படி நினைத்தார்கள் என்பதை கவனித்தீர்களா! மனிதர்களுக்கு முன்பாக யோக்கியமாக செய்யவேண்டியது அவசியமானதாக இருந்தாலும், நம்மைப் பற்றி சிலர் தவறான எண்ணம் கொள்ள ஏதுவாயிருக்கிறது என்பதை நாம் உணர்ந்து, தேவனுக்கு நாம் உண்மையாக இருந்தால், இறுதி வெற்றி நமக்கு கண்டிப்பாக உண்டு.

யோசேப்பின் வாழ்க்கையில், தன் சகோதரர்களை மீண்டும் அவன் கண்டான், அப்பொழுது அவர்கள் அவனை எகிப்த்தின் உயர் அதிகாரி என நினைத்தார்கள். அவன் கண்ட சொப்பனம் எகிப்தில் நிறைவேறுகிறது. யோசேப்பை ஒழித்துவிட்டோமென நினைத்தார்கள் அவனுடைய சகோதரர்கள் ஆனால் தேவ திட்டம், அவனுடைய வாழ்க்கையில் நிறைவேறியது. அது போல நாமும் நமக்கும் தேவனுக்குமிருக்கும் உறவை சரியாக வைத்திருந்தால், மனிதர்கள் என்ன நினைத்தாலும் சரி, தேவன் நம்மை நிச்சயமாக உயர்த்துவார் என்பதில் சந்தேகமில்லை. எனக்கன் பானவர்களே! மனிதர்கள் உங்களை பற்றி என்ன நினைக்கிறார்கள்? நாம் இவ்வுலகை விட்டுச் செல்லும் போது, நம்மை ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவன் என்று சிலராவது சொல்லுவார்களா? அப்படி சொல்லும் படியானதொரு வாழ்க்கை வாழ்வோமாக! ஆமென்.

**ஜே. பிக்கின்ஸ்**


# தொல்பொருள் ஆராய்ச்சியும் வேதாகமும்

சிறுவர் பகுதி

எனதருமை சிறு தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் இச்சிறுவர் பகுதி மூலமாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்தமாதம் நாம் வேதாகமும் அதின் காரியங்களும் உண்மையென்று சில ஆதாரங்களைக் கொண்டு படிக்கவிருக்கிறோம். சரி, நாம் பாடத்திற்குள்ளாக கடந்து செல்லுவோமா!


வேதாகமம் தேவனுடைய வார்த்தையை மட்டுமே கொண்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதனால், அதில் சொல்லப்பட்டிருக்கும் எந்த சம்பவங்களானாலும், அதில் உள்ள எல்லாமே உண்மையாய் இருக்க வேண்டும். வரலாறுகளில் நாம் பார்க்கும்பொழுது, எல்லா காலங்களிலும் வேதாகமும் அதிலுள்ள யாவும் சரியே என்று தொல்பொருள் ஆராய்ச்சி கூறுகிறது. (தொல்பொருள் ஆராய்ச்சி - ஆதிகால பொருட்களின் ஆராய்ச்சி) சரி, அது எப்படி என்று மூன்று உதாரணங்களைக் கொண்டு பார்ப்போம்.

**முதலாவதாக,** மோசே தான் வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து புத்தகங்களையும் எழுதினார் என்று நாம் வேதத்தின் மூலம் அறிகிறோம். தேவன் உரைத்ததை எல்லாம் மோசே எழுதினதினால், இதை மோசேயின் பிரமாணங்கள் என்று கூறுகிறோம் (யாத். 17:14) ஆனால் வேதத்தை நம்பாத சிலகூட்ட ஜனங்கள் மோசே, முதல் ஐந்து புத்தகங்களையும், எழுதியிருக்க வாய்ப்புகள் இல்லையென்று கூறுகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம் என்னவென்றால், அந்தக்காலத்திலே எழுதும் கலை கண்டுபிடிக்கப்படவில்லையென்று கூறுகின்றனர். ஆனால் 1933-ம் ஆண்டில் J.L. STARKEY என்பவர் ஒரு பழமையான பட்டணத்தைக் கண்டுபிடித்து அதை யோசுவா கைப்பற்றிய கானான் தேசத்தில் இருந்ததாகக் கூறுகிறார். அந்தப்பட்டணத்தின் பெயர் (Lachish) லாகீஸ். அந்த லாகிஸ் என்ற இடத்திலே Starkey என்பவர் மண்ணால் செய்யப்பட் ஒரு பானையின் மீது பதினோரு எழுத்துக்கள் செதுக்கியிருப்பதைக் கண்டார். அந்த எழுத்துக்கள் எபிரெய மொழி என்பதையும் கண்டுபிடித்தார். அந்த சம்பவத்திற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு பிரான்சு நாட்டைச் சார்ந்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மோசே பிறப்பதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட சில சுவடுகளிலிருந்த எழுத்துக்களைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். எனவே, மோசேயின் காலத்திற்கு முன்பாகவே எழுதும் கலை



இருந்துள்ளது. ஆகையால், இந்த ஐந்து புத்தகங்களையும் மோசே தான் எழுதினர் என்பதற்கும் இவைகள் சான்றாக இருக்கின்றன என்பதை, மோசே இப்புத்தகங்களை எழுதவில்லை என்று கூறுகிறவர்கள் கூட ஒப்புக்கொள்ள முடியும்.


**இரண்டாவதாக,** சிலர் ஏசாயா புத்தகத்தில் ராஜாவாகிய சர்கோன், அசீரியாவின் ராஜாவாக (20:1) இருந்துள்ளான் என்பதை பற்றி தவறாக எழுதியுள்ளார் என்று கூறுகின்றனர். ஏன் என்று அவர்களை கேட்டால் வரலாறு அப்படி ஒரு ராஜாவை குறிப்பிடவில்லை என்று கூறுகிறார்கள். ஆனால் 1843ம் ஆண்டு பிரான்சு நாட்டைச் சேர்ந்த இரண்டு தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் (Paul Botta, Austen) சர்கோன் ராஜாவின் அரண்மனையை முழுவதும் கண்டுபிடித்துள்ளனர். அந்த அரண்மனையும், பட்டணங்களும் 706 B.C. யில் கட்டப்பட்டது என்பதையும் கண்டுபிடித்துள்ளனர். அந்த அரண்மனையின் சுவர்களில் ராஜாவைப் பற்றிய குறிப்புகளும், காலங்களும் எழுதப் பட்டுள்ளன. இன்றைக்கும் அந்தச் சுவரின் சில பகுதிகள் Oriental Institute என்ற பல்கலைகழகத்தில் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது. எனவே ஏசாயா தவறு செய்து விட்டார் என்று எவரும் சொல்ல முடியாது.



சர்கோனின் அரமனை சுவரில் இருக்கும் கல்வெட்டுக்கள்

**மூன்றாவதாக,** ஏத்தியர்கள் என்ற ஒரு கூட்ட ஜனம் வேதத்தில் 40 முறை குறிப்பிடப்பட்டுள்ளனர். அவர்கள் ஒருமுறை சீரியர்களை இஸ்ரவேலிருந்து துரத்தினவர்கள் (II ராஜா 7:6) ஆனால் வேதாகமத்தை ஒத்துக்கொள்ளாத சிலபேர் ஏத்தியர் என்ற ஜனம் இல்லவே இல்லை என்கின்றனர். ஆனால் 1800களில் தொல்பொருள் ஆராய்ச்சியாளரான Hugh A.H. Sayce என்பவர் சீரியா பட்டணத்தில் கண்டுபிடித்த சில

எழுத்துக்களை ஆராய்ந்த பொழுது அதில் ஏத்தியர்கள் குறிப்பிடப் பட்டிருந்ததைக் கண்டறிந்தார். பின்பதாக 1906 ஆம் ஆண்டு Hugh wincklar என்பவர் ஏத்தியர்களின் தலைநகரம் தற்போதைய துருக்கியில் இருப்பதை கண்டுபிடித்துள்ளார். மேலும் அந்த இடத்திலிருந்து பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கல் சுவடுகளைக் கண்டுபிடித்தார். எனவே வேதாகம் தவறு என்று நாம் ஒருபோதும் கூற முடியாது.



மோசே காலத்திற்கு முன் எழுதும் கலை இருக்கிறது என நிரூபிக்கும் கல்வெட்டு.

கடைசியாக, எனதருமைத் தம்பி தங்கைகளே! இந்த தொல்பொருள் ஆராய்ச்சியின் மூலம் கண்டறிந்ததில் வேதாகமத்தின் அனைத்து சம்பவங்களும் உண்மையே என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டிப்பாக ஒத்துக் கொள்கிறார்கள். அவர்கள் கண்டுபிடிக்கும் எல்லாக்காரியங்களும் வேதத்தோடு ஒத்துப் போகிறதேயல்லாமல், முரண்படுவதில்லை. எனவே தேவன் நமக்குக் கொடுத்த இந்த பொக்கிஷமாகிய இந்த வேதாகமத்தை உண்மை யென்று நம்பாதவர்களிடத்தில், நாம் இதுபோன்ற காரியங்களை எடுத்துக்கூறி அவர்களை தேவனுடைய வார்த்தைகளை நம்பும்படியாக மாற்றவேண்டியது நம்முடைய கடமை. ஆகையால் நீங்கள் இந்த சிறுவயதிலிருந்தே இதுபோன்ற காரியங்களைச் செய்து தேவனுக்குப் பிரியமானதொரு வாழ்க்கை வாழ்ந்து அவரிடத்தில் ஆசீர்வாதம் பெறுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பார்!

ஆமென்!

**R.A.R. NAYAGAM**

## நாளும் நடப்பும்

1. வடஇந்தியா, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய பகுதிகளில் பயங்கர நிலநடுக்கம், சுமார் 50,000 பேர் பலி.
2. சட்டசபை தேர்தலுக்கு தயாராகிறது பீகார், சூடுபிடித்தது பிரச்சாரம்.
3. சூப்பர் சீரிஸ் கிரிக்கெட், மூன்று போட்டிகளிலும் உலக லெவன் அணிக்கு எதிராக ஆஸ்திரேலியா அபார வெற்றி.
4. தாய்லாந்து ஓபன் டென்னிஸ் போட்டியில் காயம் காரணமாக இந்திய வீராங்கனை சானியா மிஸ்ரா வெளியேறினார்.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை மூன்று வழியில் தேவனுடைய வார்த்தையில் இருந்து நாம் இது வரையிலும் கற்றுக் கொண்டோம். முதலாவதாக, இந்த பூமியில் அவர் வாழ்ந்த வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொண்டோம், இரண்டாவதாக, அவர் நமக்காக பட்டப்பாடுகளிலிந்தும், அடைந்த அவமானங்களிலிருந்தும் நாம் கற்றுக்கொண்டோம். மூன்றாவதாக, அவர் நமக்காக இரத்தம் சிந்தி மரித்ததிலிருந்து நாம் கற்றுக்கொண்டோம். இயேசு கிறிஸ்து நமக்கு சிறந்த நண்பர் என்பதை அறிய நமக்கு நான்காவது வழி ஒன்று உண்டு.

**அவர் மரித்தோரிலிருந்து எழுந்து, இப்பொழுது எல்லாவற்றிற்கும் தலைவராக இருக்கிறார் என்பதே அந்த நான்காம் வழி.**

இயேசு நமக்காக வாழ்ந்து, பாடுபட்டு, இரத்தம் சிந்தி, மரித்தார் என்பதை இதுவரையில் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், கிறிஸ்தவம் இயேசுவின் கல்லறையில் முடிவதில்லை! இதுதான் கிறிஸ்தவ மார்க்கத்தை மற்ற உலக மதங்களிலிருந்து வேறுபடுத்துகிறது. கிறிஸ்தவர்கள் மரித்த ஒரு தலைவருக்கு சேவை செய்வதில்லை!

இயேசுவின் சீஷர்கள் இயேசுவின் கல்லறைக்கு வந்து அது காலியாக இருப்பதைக் கண்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதன்பின்பு தான் இரண்டு தேவ தூதர்கள் அவர்களிடம், "...... உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்" என்றார்கள் (லூக்கா. 24:5,6)

ஆகவேதான், ஒவ்வொரு விசுவாசமுள்ள கிறிஸ்தவனும் பின்வருமாறு பாட முடியும்.

"அவர் கல்லறை திறந்தெழுந்தார்
தன் எதிரிகளின் மேல் மகா ஜெயமுள்ளவராய்
இருளில் அதிகாரம் உடைத்தவராய் வெற்றியுடன் எழுந்தார்
மரணத்தை வென்று - சதா காலமும் உயிரோடிருக்கிறார்."

இன்னுமாக,
"என்னை நேசித்தார்வாழ்கையில்
என்னை இரட்சித்தார் மரிக்கையில்

என் பாவங்களை வெகுதூரம் எறிந்தார் அடக்கம் பண்ணப்படுகையில்
என்னை என்றைக்கும் நீதிமானாக்கினார் இலவசமாக
ஒருநாள் அவர் வருவார் - ஆ! மகிமையான அந்த நாளில் வருவார்"
எனப்பாடுகிறோம்.

**அவர் உயிர்த்தெழுந்தது நமக்கு எப்படி முக்கியமானதான ஒன்றாகும்?**

ரோமர் 1:5த்தை வாசியுங்கள். இயேசு கிறிஸ்து தேவ சுதன் என்று **பலமாக** நிருபிக்கப்பட்டார். எப்படி நிருபிக்கப்பட்டார்? மரித்தோரிலிருந்து **உயிரோடு எழுந்ததினால்.**

1பேதுரு 1:3,4 வசனங்களை வாசியுங்கள். தமது மிகுந்த இரக்கத்தின் படியே, தேவன் நம்மை ஜீவனுள்ள நம்பிக்கையுள்ளவர்களாக ஜெபித்திருக்கிறார். நம்முடைய நம்பிக்கை எதை ஆதாரமாக கொண்டிருக்கிறது? இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினால் நமக்கு அந்த நம்பிக்கையுண்டாகி இருக்கிறது. அவர் மரணத்தை ஜெயித்து எழுந்து பரலோகத்தில் நித்தியமாக வாழ்ந்து கொண்டிருப்பது போல, நாமும் அவருக்கு உண்மையாக இருந்தால் அப்படியே நடக்கும்!.

எனக்கு அன்பானவர்களே! அந்த ஜீவனுள்ள நம்பிக்கையை பற்றி தேவன் என்ன கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். அது அழியாத, மாசற்ற, வாடாத சுதந்திரமாக இருக்கிறது என்கிறார் தேவன். அந்த சுதந்திரம் நமக்கு பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது! அந்த ஜீவனுள்ள நம்பிக்கையுடையவர்களாக நாம் இருக்கிறபடியால் அவருக்கு எத்தனை நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததினால், நமக்கிருக்கும் ஜீவனுள்ள நம்பிக்கையைப் பற்றி இன்னும் சில விஷயங்களை அறிந்து கொள்வோம்.

தீத்து 1:3 வசனத்தை வாசியுங்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் நித்திய ஜீவன் நம்பிக்கையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நம்பிக்கை எவ்வளவு உறுதியானது பாருங்கள்! தேவன் அதை நமக்கு வாக்காக கொடுத்திருக்கிறார். அவர் பொய்யுரையாத தேவன்.

எபிரேயர் 6:18,19தை வாசியுங்கள் அந்த நம்பிக்கை நமது ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. அந்த நங்கூரமான நம்பிக்கை உறுதியும், நிலையுமானதாக இருக்கிறது. அது மாத்திரமல்ல அது திரைக்குள்ளாக போகிறதாக இருக்கிறது. அதாவது, நமது நம்பிக்கை பரலோகத்தில் இருக்கிறது.

ஒரு கப்பலுக்கு நங்கூரம் ஏன் தேவைப்படுகிறது என்பதை சிந்தியுங்கள். புயல் வந்தபோதிலும் ஒரு கப்பலை, அது இருக்குமிடம் விட்டு காற்றினால் அடிபட்டு போய்விடாமல் இருக்க ஒரு நங்கூரம் பயன்படுகிறது. என்பதை நாம் அறிவோம். கிறிஸ்தவர்களாக இருக்கும் நாம் இவ்வாழ்க்கையில், சோதனைகள் என்னும் புயலை சந்திப்போம். ஆனால், நமக்கு நிலையான, உறுதியான ஒரு நங்கூரமிருக்கிறது. அந்த நங்கூரம் நமது நம்பிக்கையே. நாம் அந்த நம்பிக்கையை பற்றிக் கொண்டு, இவ்வாழ்க்கையின் சோதனைகளை கடந்து வரவேண்டும், நிலை தவறாமல் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

எபிரேயர் 2:14,15 தை வாசியுங்கள் தமது மரணத்தின் மூலமாக, மரணத்தின் அதிகாரியான பிசாசுக்கு இயேசு கிறிஸ்து மிகப்பெரிய ஒரு அடியை கொடுத்தார். அத்தோடு, ஜீவக்காலமெல்லாம் மரண பயத்திலிருக்கும் நம்மையும் அவர் விடுதலையாக்கி அந்த பயம் நீக்கியிருக்கிறார்.

தேவன் இங்கு என்ன சொல்ல வருகிறார்? நாம் எப்படி மாம்சமும், இரத்தமும் உடையவர்களாக இருக்கிறோமோ அப்படியே இயேசுவும் மாம்சமும், இரத்தமுடையவரானார். ஆனால், இயேசு மரணத்தை ஜெயித்தார். நாமும் அப்படி மரணத்தை ஜெயிப்போம் என்று அவர் வாக்கு கொடுத்ததின் மூலம், நம்மை மரண பயம் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி இருக்கிறார்.

ஆகையால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் சாவு எனக்கு ஆதாயம், மரித்து கிறிஸ்துவோடிருப்பது எவ்வளவு மேலானது என தைரியமாக கூறமுடியும். (பிலி. 1:21-23)

ரோமர் 4:25தை வாசியுங்கள் நமது மீறுதலின் நிமித்தமாக அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்பதற்காக நாம் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். அதுமாத்திரமல்ல; நம்மை நீதிமான்களாக்க அவர் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார் என்பது நமக்கு சந்தோஷத்தைத் தரவேண்டும்.

அந்த மகத்தான செய்தியினுடைய முக்கியத்துவத்தை நாம் ஆழமாக சிந்திக்க வேண்டும். நம் நீதிமான்களாக்கப்படுவதற்கும் அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதற்கும் என்ன தொடர்பு?.

இயேசுவின் உயிர்த்தெழுதல், தன் பிதாவுக்கான கிருபாதார பலியை முடித்து வைக்கக்கூடியதாக இருந்தது. இயேசுவின் இரத்தம் நமது பாவங்களுக்காக சிந்தப்பட்டது என்பதை நாம் அறிவோம். (எபி. 9:22; மத். 26:28)

தயவுசெய்து எபி. 7:13,14:9; 11-14,23,24 ஆகிய வசனங்களை வாசியுங்கள் இயேசு தமது விலையேறப் பெற்ற இரத்தத்தை பரலோகில் செலுத்தவேண்டியதாக இருந்தது என பார்க்கிறோம். இந்த பூமியில் அவர் ஆசாரியராக இருக்க முடியாதென்பதையும் நாம் அறிவோம். நமக்கு உண்மையுள்ள, இரக்கமுள்ள ஆசாரியராக இருக்கும்படி அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்படவேண்டியதாக இருந்தது.

இயேசுவின் உயிர்த்தெழுதல், நமது பிரதான ஆசாரியராக அவர் இருக்கத் தேவையான எல்லா பணிகளையும் செய்து முடிக்கவே என்பது உண்மை. அவர் பரலோகத்தில் தாவீதின் சிங்காசனத்தில் அமர்ந்து ஆண்டவராக ஆளுகை செய்ய இந்த உயிர்த்தெழுதல் வகை செய்கிறது. (அப். 2:29-33; லூக்கா. 1:32,33)

நாம் தேவனுடைய வார்த்தையான சத்தியத்திற்கு கீழ்ப்படிகையில் அந்த ஆத்துமாவை சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தத்தை நமது ஆத்துமாவோடு தேவன் தொடர்பு படுத்துகிறார். (1பேதுரு 1:18-22) அப்பொழுது அவருடைய இரத்தத்தால் நீதிமான்களாகிறோம். (ரோமர். 5:9)

ரோமர் 4:25, சுவிசேஷத்தின் இருதயத்தையும், ஆத்துமாவையும் உடையது! நமது பாவங்களுக்கான கிருபாதார பலியாக நமது ஆண்டவர் கிறிஸ்து, தேவனால் ஒப்புக்கொடுக்கப்பட்டார். நாம் தேவனிடத்தில் ஒப்புரவாக, நீதிமான்களாக்கப்பட்ட அவர் இயேசுவை உயிரோடு எழுப்பினார். அவருடைய அளவற்ற கிருபையினாலும், இரக்கத்தினாலும், இப்பொழுது நம்மால் தேவனுடன் ஒப்புரவாகவும், ஒரு சரியான உறவைக் கொள்ளவும் இந்த உயிர்த்தெழுதல் வழி வகை செய்கிறது. நமக்கு இருக்க வேண்டியதெல்லாம், ஜீவனுள்ள செயல்படுகிற, கீழ்ப்படிதலுள்ள விசுவாசமே!

இயேசுக்கிறிஸ்து உயிரோடு எழுந்தால், தேவன் அப்போஸ்தலனாகிய பவுலைக் கொண்டு எழுதிய 1 கொரி. 15;54-57 வசனங்களை நாம் நினைத்து அவைகளை நாமும் மனதார சொல்ல முடியும். அந்த வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

1கொரிந்தியார் 15ம் அதிகாரம் இயேசுக்கிறிஸ்துமரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்ததைப் பற்றியும், நாமும் அப்படி எழுப்பப்படுவோம் என்பது பற்றியும் பேசுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவனும், அழியுள்ளதாகிய இந்த சரீரம் அழியாமையையும், சாவுக்கேதுவானது, சாவாமையும் தரித்துக்கொள்ளும் அந்த நாளை ஆவலாக எதிர்பார்க்கலாம்.

உயிர்த்தெழுதலில் மரணம் ஜெயமாக விழுங்கப்படும்! அப்பொழுது ஒவ்வொரு கிறிஸ்தவனும், "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?" என்று தைரியமாக சொல்லமுடியும்.

இயேசு கிறிஸ்து வேத வாக்கியங்களின்படியே மரித்து அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். (1 கொரி. 15:1-3). நமது இரட்சகரும் ஆண்டவருமாகிய இயேசு இவைகளை நமக்காக அன்போடு செய்ததின் மூலம் நாம் பாவத்தின் மீதும், மரணத்தின் மீதும் ஜெயம் கொள்ளுகிறோம். இதற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லவேண்டும்.

1கொரி. 15:58டை வாசியுங்கள். நாம் இதற்காக நன்றியுள்ளவர்களாக மாத்திரமல்ல, நம் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே பெருகுகிறவர்களாயுமிருக்க வேண்டும். கர்த்தருக்குள் நாம் படும் பிரயாசம் விருதாவாக போகாது என்று எண்ணி நாம் அப்படி கிரியைகளை நடப்பிக்கலாம்.

இந்த வேத வனசங்களில், இயேசு நமக்கு சிறந்த நண்பராக இருப்பதை வெளிப்படுத்தும் அவருடைய உயிர்த்தெழுதல், நித்தியத்துக்கும் எப்படி முக்கியமானது என்பதை பார்த்தோம். அந்த உயிர்தெழுதலினால், அவர் தேவனுடைய குமாரனாக பலமாக நிரூபிக்கப்பட்டார். அந்த உயிர்த்தெழுதல் நமக்கு ஜீவனுள்ள நம்பிக்கையைத் தருகிறது. அந்த நம்பிக்கை, பரலோகத்தில் நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதாகும். அந்த நம்பிக்கை நமக்கு ஆத்தும நங்கூரமாக இருக்கிறது.

இயேசு கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதலினால், அவர் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் மரண பரியந்தம் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கியிருக்கிறார். அவர் நாம் நீதிமான்களாகும்படி உயிர்த்தெழுந்தார். அந்த உயிர்த்தெழுதலின் மேலாக நாம் மரணத்தின் மீதும், பாவத்தின் மீதும் வெற்றி கொள்ளுகிறோம்.

அந்த வெற்றியை மனதில் கொண்டு ஒவ்வொரு நாளும் அவருடைய கிரியையில் பெருகுவோம்!

கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த மாதம், இயேசு மரித்தோரிலிருந்த எழுந்தது பற்றி இன்னுமோரு முக்கிய கருத்தை தியானிப்போம்.

**சார்லி டீபால்மா.**

# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் யாவரையும் கன்மலையாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அன்பான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

நம் செய்தியின் வசனப்பகுதி. நெகேமியா 2:17-18 ஆகிய வசனங்கள் செய்தியின் உள்ளே செல்லும் முன்பு இவ்வசனப்பகுதியின் பின்னணியைப் பார்ப்பது அவசியம்.

சமஸ்த இஸ்ரவேலையும், சவுல், தாவீது, சாலமோன் ஆகியோர் தலா 40 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். சாலமோனின் கடைசி கால வாழ்வு அவ்வளவு மெச்சிக் கொள்ளும்படியாக இல்லை. 1ராஜா 15:5 தாவீது உரியாவின் மனைவி விஷயம் ஒன்று தவிர..... செம்மையானதைச் செய்தான் என்று ஆவியானவர் சாட்சி கொடுப்பது போல, சாலமோனுக்குக் கொடுத்ததாகக் காணவில்லை 1 ராஜா 11:1-10 வசனப்பகுதிகளை வாசித்துப்பாருங்கள். இந்த சூழ்நிலையிலேதான் இஸ்ரவேல் தேசம். சாலமோனின் படை வீரன் யெரோபெயாமின் பக்கம் 10 கோத்திரம் வடக்கு ராஜ்ஜியம் என்றும் சாலமோனின் குமாரன் ரெகோபெயாம் 2 கோத்திரங்களுக்கும் இராஜக்களாகி ஆளுகை செய்து வருகின்றனர். (1 ராஜா 11:29-33)

இஸ்ரவேல் ஜனங்களின் மீறுதல் நிமித்தமாக வடக்கு ராஜ்ஜிய ஜனங்கள் அசீரியர்களினால் சிறைபிடித்துச் செல்லப்படுகின்றனர். தெற்கு ராஜ்ஜயத்தில் இருந்த யூதர்கள் பாபிலோனிய ராஜாக்காளல் சிறைப்பிடித்து செல்லப்படுகின்றனர். இந்த நிலையிலே சூசான் அரண்மனையிலே வேலை செய்து வந்த நெகேமியா என்னும் தேவபக்தியுள்ள யூதனிடம் எருசலேம் நகரம் பாழ்ப்பட்டுக்கிடக்கிறது என்ற செய்தி கிடைக்கிறது (நெகே 1:1-7) நெகேமியா, உபவாசித்து, தேவனிடம் கண்ணீருடனே ஜெபித்து எருசலேம் மீது வைராக்கியம் கொண்டு எழுப்பிய அறைகூவலான அழைப்புதான் **எழுந்துகாட்டுவோம் வாருங்கள்.** என்ற இந்த அழைப்பு. நெகேமியாவின் சீரிய முயற்சியினாலே பாழ்பட்டுகிடந்த எருசலேம் நகரம் கட்டப்பட்டது (நெகே. 8:9) துக்கம் சந்தோஷமாக மாறியது. இன்றைக்கும் யோவா 17:20-22 ஆண்டவரின் இந்த ஜெபத்தை (நாம் ஒன்றாயிருக்கும்படி) செயலாக மாற்றுவது நம்மால் மட்டுமே முடியும். தேவனுடைய வீடாகிய சபையை (1தீமோ 3:15) கட்டுவதற்கு உங்களை அன்போடே அழைக்கின்றோம். **எழுந்துகட்டுவோம் வாருங்கள்** அவிழ்த்துக் கொட்டிய நெல்லிக்காய் மூட்டையைப் போல சிதறிக்கிடக்கும் கிறிஸ்தவ மார்க்கத்தை

ஒன்றாகக் கட்டுவதற்கு ஒரு ஆலோசகர் தேவை யார் அவர்? நம் ஆண்டவர் கிறிஸ்துவே அந்த ஆலோசகர்.

## கிறிஸ்து சொல்லியபடி கட்டுவோம் மத். 7:24

கிறிஸ்து சொல்லுகின்றபடி கட்டினால்தான் அது நிலையானதாய் இருக்கும் கற்பாறையின் மேல் கட்டுபவர்களே புத்தியுள்ள மனிதர்களாயிருப்போம். பெருமழை, புயல் அதுபோன்ற எதுவந்தாலும் நிலைத்திருக்கும் ஆலோசகர் கிடைத்துவிட்டார் அஸ்திபாரத்தைத் தோண்டுவோம் வாருங்கள். மூலைக்கல்லைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்துவோம் யார் அந்த அஸ்திபாரம் **கிறிஸ்துவே அஸ்திபாரம்.**

**ஏசாயா 28:16ன்படி** ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது இதோ அஸ்திபாரமாக ஒருகல்லை நான் சீயோனிலே வைக்கிறேன் அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேற்றப்பெற்றதும்............ விசுவாசிக்கிறவன் பதறனன். 1கொரி 10:4ன்படி கிறிஸ்துவே அந்த கன்மலையாய் இருக்கின்றார். நாம அவரையே விசுவாசிக்க வேண்டும். ரோமர் 9:33ன்படி இவரைக் கிறிஸ்து என விசுவாசியாதவர்கள் இடறினார்கள். நீங்களாவது இந்த கன்மலையை (கிறிஸ்துவை) விசுவாசித்தால் நியாயத் தீர்ப்பு நாளில் வெட்கப்படமாட்டீர்கள்.

## 1. வேறே அஸ்திபாரம் கிடையாது அப் 4:11-12

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பில்லை வானத்தின் கீழே கிறிஸ்து என்கிற ஒரு நாமத்தைத் தவிர வேறொரு நாமத்தை தேவன் கட்டளையிடவில்லை 1 கொரி 3:10-11 வேறொரு அஸ்திபாரத்தைப் போட ஒருவராலும் முடியாது. பொன், வெள்ளி, வைக்கோல் ஆகிய எந்த ஒன்றில் கட்டினாலும் அக்கினி அவைகளை எரித்து சாம்பலாக்கிவிடும் ஆனால் கன்மலையை அக்கினியால் ஒன்றும் செய்யமுடியாது நம் ஆண்டவர் மரணத்தை ஜெயித்து தம் சபையைக் கட்டினார். (அப். 20:28) சங்118:22ன்படி ஆகாதவரென்று யூதர்களால் தள்ளப்பட்ட அவரே இரட்சகரானார். ஏசாயா 53:1-9ன்படி நம் பாவங்களுக்காக பாடுகளை அவமானங்களை தன்மேல் ஏற்றுக்கொண்டவரும் கிறிஸ்துவே. இவரே நம்மை பிதாவினிடம் அழைத்துச் செல்பவர். யோவா 14:6 ன்படி கிறிஸ்துவே சத்தியம் கிறிஸ்துவே ஜீவன்.

## 2. கிறிஸ்து தன் சபையை கட்டினார் மத். 16:18-19

இந்தக்கல்லின் மேல் என்சபையைக் கட்டுவேன் என்றார். நன்றாக வார்த்தையைக் கவனியுங்கள். வேறு யாருடைய சபையையும் அல்ல கிறிஸ்து தன்னுடைய சபையைக் கட்டுவேன் என்றார் மத். 16:18, பரலோக ராஜ்ஜியத்தின் திறவுகோலாகிய தேவ வசனத்தைக் கொடுத்தார். கிறிஸ்து

உயிர்த்தெழுந்த பின்பு வந்த முதல் பெந்தேகொஸ்தே நாளில் பேதுரு அந்த திறவுகோலை பயன்படுத்தினார் (அப். 2:14-41) நீங்கள் சிலுவையில் அறைந்த அவரே உங்கள் இரட்சகராகிய கிறிஸ்து எனப்பிரசங்கித்தார். அந்த ஜீவ வார்த்தைகள் ஏறக்குறைய 3000 பேரின் இருதயங்களை குத்திக்கிழித்தது. அவர்கள் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய அதாவது கிறிஸ்து இரத்தம் சிந்தி சம்பாதித்த (அப். 20:28) கிறிஸ்துவின் சபையிலே சேர்க்கப்பட்டனர். (அப் 4:4) 5000பேர் கிறிஸ்தவர்களானார்கள் (அப். 5:14) திரளான புருஷர்களும், ஸ்திரிகளும் கிறிஸ்தவர்களானார்கள்.

அவர்கள் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டார்கள். (கலா 3:26,27) கிறிஸ்தவர்களாக வாழ்ந்தார்கள் இன்று ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் அவர் கிறிஸ்தவராக மட்டும் இருப்பார் எந்த மனிதப் பெயர்களைக் கொண்ட சபையிலும் அங்கம் வகிக்க மாட்டார். அவருடைய ஐக்கியம் கிறிஸ்துவுடன் கிறிஸ்துவின் சபையிலே இருப்பார்.

இரட்சிப்பிற்கான இரகசியம் இதுதான். II கொரி 13:5 இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கின்றாரா? என சோதித்துப் பாருங்கள். நாம் கிறிஸ்து கட்டிய சபையாகிய ராஜ்ஜியத்தில் இருந்தால்தான் (1கொரி 15:24) அந்த சபை தேவனுடைய பரேலாகம் வரை செல்லும்.

## 3. நீங்கள் செய்யவேண்டியது என்ன?

அப். 2:40 மாறுபாடான சந்ததியை விட்டு விலகி மெய்யான சபையிலே ஐக்கியப்படவேண்டும். இப்படிப்பட்ட சத்தியத்தை நீங்கள் எல்லோருக்கும் அறிவித்து கிறிஸ்துவின் ராஜ்யம் தேவனுடைய நகரத்தைக் காட்டும்படி உங்களை **"எழுந்துகட்டுவோம் வாருங்கள்"** அன்போடே அழைக்கிறோம். எபே 2:19-22 இப்படி நீங்கள் கட்டினால் நாம் அந்நியரும், பரதேசிகளுமல்ல ........தேவனுடைய வீட்டாராயிருப்போம். இக்கட்டுரையை வாசிக்கிற நீங்களும் இந்த மெய்யான சபையிலே அங்கமாயிருக்கிறீர்களா? என சோதித்துப் பாருங்கள்.

## 4. இயேசு கண்ணீர் விட்டார் லூக் 19:41-42

எருசலேம் நகரத்தைப் பார்த்து அவர்கள் மனந்திரும்பாததற்காக கண்ணீர் விட்டார். அப். 20:19,31 பவுல் கண்ணீரோடே பிரசங்கித்தார். இவ்வளவு வசன ரீதியாக காரியங்களை விளக்கியும் இன்னும் உணராத அளவிற்கு அவ்வளவு கல்மனம் படைத்தவர்களா நீங்கள். உங்கள் கல்லான இருதயத்தை சதையானதாக மாற்றுங்கள் கிறிஸ்தவர்களாக இருங்கள் கிறிஸ்துவின் சபையில் உங்கள் ஆத்துமாவை சேர்த்து நித்திய ராஜ்ஜியத்திலே பிரவேசியுங்கள் என அழைக்கிறோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**S. பிச்சைமுத்து**, தூத்துக்குடி

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.


for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003


Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-




எட்டாவது வேதாகம கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் மற்றொரு பகுதி


கருத்தரங்கில் பாடலில் வழி நட்த்துவோர்



சகோ. சார்லி டீபால்மா


சகோ. பிக்கின்ஸ்


சகோ. பாலு


சகோ. தாமஸ் தங்கதுரை


சகோ. பாஸ்கர்


சகோ. பிச்சைமுத்து


சகோ. பிலிப் பாஸ்கர்


சகோ. ஏசையன்


சகோ. நத்தானியேல்


சகோ. பால்ராஜ்


சகோ. சாமிநாதன்

**கருத்தரங்கில்**
**கருத்துரையாற்றிய கருத்தாளர்கள்**

இறுதியில் சபையின்
பொருளாளர் நன்றி கூறுகிறார்.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai-625010. Editor. S. Rajanayagam.